மசக்கவுண்டன்செட்டிபாளையம் ஊராட்சி மன்ற தலைவர் அவர்களின்

நடவடிக்கைகள்

முன்னிலை : திருமதி.S.புஸ்பவதி

ந.க.எண்: 1771/ 2023 /P1 *நாள்: 14.02.2024*

பொருள்: கோயம்புத்தூர் மாவட்டம்-அன்னூர் ஊராட்சி ஒன்றியம், மசக்கவுண்டன் செட்டிபாளையம் ஊராட்சி மற்றும் கிராம **க.ச.எண்கள்: 376/1H2, 376/1I,376/1J,376/1K-ல் 2.29 ஏக்கர் அல்லது 9275.00ச.மீ** பரப்பளவில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கான ஊராட்சி அனுமதி வழங்கி உத்தரவிடல்- தொடர்பாக

பார்வை:

1. சாலை அமைப்பு மற்றும் பொது ஒதுக்கீடு தானப்பத்திரம் மூலம் வழங்கியது - பத்திர பதிவுத்துறை **பத்திர எண்.13713/2023 நாள்: 17.10.2023**
2. மனைப்பிரிவு - நகர ஊரமைப்பு துறை இணை இயக்குநர்/ உறுப்பினர் செயலர், கோயம்புத்தூர் அவர்களின் சுற்றறிக்கை கடிதம் **ந.க.எண்: CBEREGION: WOHZWAW2 /2023/TCP நாள்: 06.11.2023**
3. கோயம்புத்தூர் உள்ளூர் திட்டக்குழும உறுப்பினர் செயலர்/இணை இயக்குநர், கோயம்புத்தூர் அவர்களின் வரைபட அனுமதி எண்: **ம.வ/கோ.ம.எண்: 336/2023 நாள்: 06.11.2023** வழங்கப்பட்டுள்ளது.
4. **திரு.B.ராம்குமார் மற்றும் இருவர்**,த/பெ திரு.பாலகிருஷ்ணன், க.எண்: 44 ஜெய் நகர், VK ரோடு, பீளமேடு, கோவை - 641004 அவர்களின் விண்ணப்ப நாள் : 02.01.2024
5. நிலப்பயன்பாட்டிற்கு செலுத்திய நாள் : **02.01.2024**
6. பரிசீலனை கட்டணம் செலுத்தியது பலவகை **இரசீது எண்:00519 நாள்: 02.01.2024 Rs.3000/-**
7. வளர்ச்சி கட்டணம் செலுத்தியது பலவகை இரசீது எண்.**00520** நாள்: 02.01.2024 **Rs.52000/-**
8. வழிகாட்டி மதிப்பீட்டு தொகை (3%) Rs.48100**/-** E-Challan No: 20240102005337 Date: 02.01.2024

உத்தரவு

1. பார்வையில் குறிக்கப்பட்டுள்ள அனைத்து கடிதங்கள் மற்றும் கோயம்புத்தூர் உள்ளூர் திட்ட குழுமம் இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர் அவர்களின் **ந.க.எண்: CBEREGION:WOHZWAW2/2023/TCP நாள்:06.11.2023** -ன்படி கோயம்புத்தூர் மாவட்டம் அன்னூர் வட்டம், மசக்கவுண்டன்செட்டிபாளையம் ஊராட்சி மற்றும் கிராம **க.ச.எண்கள்: 376/1H2,376/1I, 376/1J, 376/1K-ல் 2.29 ஏக்கர் அல்லது 9275.00 ச.மீ** பரப்பளவில் அமைந்துள்ள உத்தேச குடியிருப்பு மனைபிரிவிக்கு வரைபட அனுமதி எண்: **ம.வ/கோ.ம.எண்: 336/2023 நாள்: 06.11.2023** எண்ணின்படி திட்ட அனுமதியும் வழங்கப்பட்டுள்ளதின் அடிப்படையிலும் மேலும் மேற்கண்ட மனைபிரிவில் மசக்கவுண்டன்செட்டிபாளையம் ஊராட்சிக்கு தானமாக வழங்கக்கூடிய சாலைகள் மற்றும் பூங்காவிற்கான பொது திரவிடங்கள் ஆவண பதிவு எண்: **13713/2023 நாள்: 17.10.2023 TANGEDCO**-க்கும் சேர்த்து அன்னூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண பதிவு எண். **13713/2023 நாள்: 17.10.2023,** மூலம் பதிவு செய்யப்பட்டு மேற்படி அசல்

ஆவணமும் ஊராட்சியில் பெறப்பட்டுள்ளது. மேலும் மனைப்பிரிவு பரிசீலனை கட்டணம் **ரூ.3000/- இரசீது எண்.00519 நாள்: 02.01.2024** மற்றும் வளர்ச்சி கட்டணம் **ரூ.52000/- இரசீது எண். 00520 நாள்: 02.01.2024** ஊராட்சி அலுவலகத்தில் செலுத்தப்பட்டுள்ளது மேலும் மனைபிரிவிற்கு ஊராட்சியில் தீர்மானம் நிரைவேற்றப்பட்டுள்ளது. **தீர்மான எண்: 2 நாள்: 03.01.2024** எனவே மேற்குறிப்பிட்டுள்ள மனைபிரிவிற்கு இதன் மூலம் அனுமதி வழங்கப்படுகிறது.

நிபந்தனைகள்:

1. மனைப்பிரிவில் அமைந்துள்ள மனைகள் நீர்நிலைகள் அரசு புறம்போக்கு திறந்தவெளி ஒதுக்கீடு அடுத்த நிலத்திற்கு வழியாக அமையும் காலிமனை உத்தேச காலை மற்றும் ரயில் தண்டவாளம், பொதுபாதை மற்றும் நில உச்ச வரம்பு சட்டத்தின்படி உள்ள மனையிடம் அதிக உயர் மின்னழுத்த பாதை போன்றவை அமைந்திருக்க கூடாது.
2. மனைப்பிரிவு கட்டமைப்பு (Frame Work) செய்த இம்மனைப்பிரிவில் அமையும் மனைகளின் உரிமையாளர்கள் அவர்களின் மனையை முறைப்படுத்தப்படாமலிருப்பின் மின்சாரம், குடிநீர், கழிவுநீர் வடிகால் அமைப்பு துண்ணடிக்கப்படும்.
3. மனைப்பிரிவில் அமைக்கப்பெற்றுள்ள கட்டிடங்கள் முறைப்படுத்தப்பட்டதாக கருதப்படாது.
4. இம்மனைப்பிரிவின் நிலங்கள் தொடர்பாக மனைப்பிரிவு உரிமையாளர் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற்று சமர்பித்த வில்லங்க சான்றின் சரித்தன்மையை உறுப்பினர் செயலர் (பொறுப்பு) கோயம்புத்தூர் உள்ளூர் திட்டம் குழுமம் அவர்கள் உறுதி செய்து வழங்கிய செயல்முறை ஆணையின் அடிப்படையில் மனைப்பிரிவு முறைப்படுத்தப்பட்டது. இதில் ஏதேனும் தவறுகள் அல்லது ஆவணங்களின் சரித்தனமை குறித்த புகார்கள் கண்டறியப்படின் ஒட்டு மொத்த மனைப்பிரிவின் அங்கீகாரம் ரத்து செய்யப்படுவதுடன் சட்டபூர்வமான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
5. இம் மனைப்பிரிவில் அமையக்கூடிய தனிமனைகளுக்கு வீடு கட்ட வரைபடம் அங்கீகாரம் வழங்கும் போது அடிப்படை வசிகள் அனைத்தும் நிறைவேற்றிய பின்னர் தான் வரைபடம் அங்கீகாரம் வழங்கப்படும். (குடிநீர் வசதி, சாக்கடை வசதி, தெருவிளக்கு வசதி மற்றும் சாலை வசதி)
6. மேலும் உள்ளூர் திட்ட குழுமத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளும் நிறைவேற்றப்பட வேண்டும்.

இணைப்பு : வரைபடம்

புஸ்பவல்லி
தலைவர் / செயல் அலுவலர்
மசக்கவுண்டன் செட்டிபாளையம் ஊராட்சி
அன்னூர் ஊராட்சி ஒன்றியம்

14/2/2024

பெறுநர்:

திரு.B.ராம்குமார் மற்றும் இருவர்,
த/பெ திரு.பாலகிருஷ்ணன்,
க.எண்: 44 ஜெய் நகர்,
VK ரோடு, பீளமேடு,
கோவை - 641004

நகல்கள்

1. கோயம்புத்தூர் உள்ளூர் -
திட்டகுழுமம் உறுப்பினர் செயலர்,
கோயம்புத்தூர் – 12
2. சார்பதிவாளர் அலுவலர்,
சார்பதிவாளர் அலுவலகம், அன்னூர்